ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

03.04.2025

1. அரங்கா முருகா என வேண்டி
அனுதினமும் பூஜிக்கும் மக்கட்கு
வரங்கள் தா என வேலவன் உத்தரவிட
வணங்கியே அரங்கனும் வரங்கள் தன்னை

2. தன்னையே அருட்சுவடி வழியில்
தக்க ஆசியாக அருள வந்தேன்
நன்னயமாய் குரோதி சேல் திங்கள்
நாட்டிடுவேன் சூல குருவார அருளாசி

3. ஆசியுண்டு நன்மைகள் அடைய
ஆசியுண்டு நல்லவர் தொடர்பும்
வசமாகி சகல காரியங்களும்
வல்லமையோடு வெற்றி கொள்ள ஆசி

4. ஆசிதனை பிரணவக்குடில் அணுகி
அன்பர்களும் சோதி சொரூபில் கண்டு
நேசம்பட வணங்கி பின்னே
நிலமதனில் என் சக்தி வரமாகக் கொண்ட

5. கொண்ட சீடன் ராம்குமார் கரம்பட
குருவாக சூட்சுமமாய் யான் தரும்
உண்டான சர்வ தீட்சைகளும்
ஒவ்வொன்றாய் ஏற்று நன்கு வழிபட

6. வழிபட தனிபலம் கூடி
வருவாய்கள் வழிகள் தன்னை
தெளிவுடன் முடிவு செய்து நடத்தி
தேட்டு தனவளம் யோகம் பெற நேரும்

7. நேருமையான வாழ்க்கை முறையும்
நீதி குன்றா வாழ்க்கை நடத்தி
பெருமை மிக்க ஞானவாழ்வாக
பிறவா பேறும் கண்டடைய நேரும்

8. நேருமைபட அரங்கன் யானும்
நிலவுலக சைவ நெறிக்கு வர
உறுதி கொண்டு சன்மார்க்கமாம்
உயர் நெறி தந்தருளி வர

9. வருகவே சைவம் திளைக்க
வருங்காலம் தயவே வடிவாக
பெருமை மிக்க ஞானவான்களாக
பூவுலகும் கண்டு நிலை உயரும்

10. உயரவே ஞான ஆட்சியும்
உயிர்க்கொலை என்பதே இல்லாதபடி
தயவான வேலவன் ஆட்சியும்
தருமவான்கள் நிறைந்த சபையுமாக

11. ஆகவே கலியுகம் மாற்றம்
அடைந்து நல்லாட்சி ஞானஆட்சியாக
மகான் அரங்கனென் படைகளால்
மண்ணுலகம் மாற்றம் காணும் அரங்கனென்
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி